கருணை நகர

Q7:4176
N16
147994.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

315
A.19
OF THE REGISTRAR
15 OCT 1917
MADRAS

இஃது

மதுரை

மாலிக்குசாகிபுப்புலவரவர்கள்பாடிய

# தொழுகைநாமா.

காயற்பட்டணம்,

காசிம்புலவரவர்கள்பாடிய

## இன்னிசை.

செய்கப்துல் காதிர் நயினாலப்பை

ஆலிம்புலவரவர்கள்பாடிய

## இன்னிசை.

ஆகிய இம்மூன்றுமிதிலடங்கியிருக்கின்றன.

சென்னை.

சக்கரவர்த்தி & கம்பெனியாரவர்களது

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

...லையர் தெரு, சென்னை.

07:4146
M6
147994

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

மதுரை

மாலிக்குசாகிபுப்புலவரவர்கள்பாடிய

# தொழுகைநாமா.

காயற்பட்டணம்,

காசிம்புலவரவர்கள்பாடிய

## இன்னிசை.

செய்கப்துல் காதிர் நயினாலப்பை

ஆலிம்புலவரவர்கள்பாடிய

## இன்னிசை.

ஆகிய இம்மூன்றுமிதிலடங்கியிருக்கின்றன.

சென்னை.

சக்கரவர்த்தி & கம்பெனியாரவர்களது

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

நெ-13, நம்புலையர் தெரு, சென்னை.

-600 008
147494

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

15 OCT 1917
MADRAS

# தொழுகைநாமம்

காப்பு-விருத்தம்.

ஆதியேயெந்தவஸ்து மமைந்தநற்கோவேயார்ந்த
நீதமேநெறியேயொன்று நிகரிலாதவனேயுன்றன்
வேதமேவிளங்கவந்த மெய்யிறசூல்பொருட்டாற்
சோதியார்தொழுகைநாமச் சொல்லநீகாப்புத்தானே.

கண்ணிகள்.

கடவுள் துதி.

ஆதிபெரியவனே ஹக்கான நாயகனே
ஓதியுனைப்புகழ உதவியருள் செய்வாயே.

எந்நாளு முள்ளவனே யெங்குநிறைந்தவனே
நன்றாய்ப்புகழவென் றனுவிலுதவி செய்வாய்.

கல்லாதமூடன் கவிதைமொழி யறியேன்
சொல்லால்த்தொடங்குகின்றேன் றொழுகைவரலாற்றையெல்லாம்.

ஹிஜறத்தி ஆயிரத்திருநூற்றுப் பதினாவில்
றஜபதனி லேவள்ளல் நபிபொருட்டாற்சொல்லுகிறேன்.

மதுரைக் கதிபன்ஜமால் மைந்தன் மாலீக்குசாகிப்
துதிசெய்துபாடலுற்றேன் றேன் றுநல்லமானிடரே.

நூன்முகம்.

அவ்வல் பஜிறுகுத்தி லஞ்சி விழித்தெழுந்து
செவ்வைப் பறுலைச் சிறப்பாய்த்தொழுதிடுவீர்

மவுத்தில்லை யென்றுங்கள் மனதில்நினையாதீர்
மவுத்தைச் சதிபாடாய் வகுத்தானுடையவன்றான்

ஆதிபிடத்தினிற்போ யாலநபி பேசிவந்த
வேதவிதித்தொழுகை விட்டுவிடவேண்டாங்காண்

மவுத்தைப் பிடரியிலே வகுத்தானே யாண்டவன்றான்
மவுத்துவரு மந்நேரம் மூச்சுத்தூண்டிற் போட்டிடுவார்

எவற்படியேதா னிறையோனைத் தினந்தொழுது
பாவந்தொலைத்துநல்ல பதவிபெற வேண்டிடுங்காண்

ஒருகண் ணிமைமூடி மறுகண்விழிக்குமுன்னே
குறுக்கே மவுத்துவலை கொண்டுவந்துவீசிடுவார்

ஹக்னுடன் மன்றாடி யைம்பதையு மைந்தொகுத்தாய்
மக்கநபி பேசிவந்த வார்த்தைதட்டவேண்டாங்காண்

கடலேழுந்தானழிக்குங் காலனாருங்கண்முன்னே
படைகாரன் போலவந்து பறித்துயிரை வாங்கிடுவார்

மவுத்துமொரு கோட்டையென்று வகுத்துவிட்டநாயனுக்கு
ஒகுத்தறிந்துநீங்கள்மிக வோதித்தொழுதிடுங்கள்

ஆண்டிருக்கவேண்டுமென வாசைமிகவைக்குறீர்
வேண்டாம்வீணாசையெல்லாம் விட்டுவிடுமானிடரே

ஆகிறதுக்காதார மைந்தொகுத்துமன்புவைத்து
தேசமிருக்கையிலே தேடிடுங்கள்மானிடரே

ஒருதோட்சலாங்கொடுத்து மறுதோட்டிரும்புமுன்னே
மருவார்கள்போலே மவுத்துதந்துதோன்றிடுங்காண்

மவுத்தின்பறையடித்து மறுமூச்செழும்புமுன்னே
ஜெகத்திற் றெழுதந்தத் திரவியத்தைத்தேடிடுங்கள

ஒருகால் நிலத்தில்வைத்து மறுகாலெடுக்கமுன்னே
அருகே மலக்கிருந்தே யாவிதனை வாங்கிடுவார்

காசினியில் வாழ்வெல்லாங் கண்சிமிட்டிக் கண்விழித்துப்
பேசுமட்டு முண்டோதான் பித்துன்யாமானிடரே

மெய்யாய்த் தொழுகைதன்னை விட்டவர்கள் காபிறென்று
தூய்யோ னபியிறசூல்சொன்னார் தொழுதிடுங்கள்

நித்திரையிற்றான்படுத்து நிச்சயமோதெழுந்திருக்கச்
சுத்தனுட வல்லபத்தைச் சொல்லுவர்யார் மானிடரே

தொழுகைபறக்கத்தினாற் சுவர்க்கப்பலன்பெறுவீர்
நழுவாமலைந்தொகுத்து நாடித்தொழுதிடுங்கள்

பேசியிருக்கையிலே பெரியோன்மலக்குவந்து
கூசாமலுன்னுயிரைக் கொள்ளையிட்டுக்கொண்டகல்வார்

மாணிக்கமான வரிசைத் தொழுகைதனைப்
பூணிக்கையாய்க்கொண்டுவந்தோர் பொற்பதியிலேபுகுவார்

நடக்கவிருக்கையிலே ராக்காலந்தூங்கையிலே
துடிக்கமலக்குவந்து தோன்றிடுவார்மானிடரே

தொழுகைக்குருங்கூரந் தவுபாவுந்திக்கிறும்
கொழுகுஞ்சலவாத்தும் கொண்டாடிக்கொண்டிடுங்கள்

அள்ளியொருபிடிச்சோ றருந்தவெடுக்கையிலே
துள்ளிமலக்குவந்து தோன்றிடுவார்மானிடரே

கடனானவைந்தொகுத்துங் காசினியிற்றீர்த்துவிட்டுத்
திடமானநல்வழியைத் தேடிடுங்கள்மானிடரே

சிரித்திங்கிருக்கையிலே சீமான்மலக்குவந்து
பறித்துயிரைவாங்கிடுவார் பாரிலுள்ளமானிடரே

ஆவியிருக்கையிலே யஞ்சியஞ்சி யஞ்சொகுத்தும்
மேவித்தொழுதிடுங்கள் மேலாப்பலன்பெறுவீர்

சொல்லாமற்பேசாமற் றுணையோருஞ்சூழ்ந்திருக்க
வல்லோன்மலக்குவந்து வல்லுயிரைவாங்கிடுவார்

தொழுகாதபேர்கள்தன்னைத் தோஷிபெரும்பாவியென்று
எழுதப்படும்வானோர்கள் இலகுனத்துங்கூறிடுவார்

அல்லாதுவிட்டிந்தவுயி ரகன்றிடும்போதுங்கள்பொருட்
செல்லாதுமண்ணறைக்குட் சேர்ந்துவரமாட்டாதே

உயிரிருக்கும்போதே யுருக்கமுடன்கைகொடுத்தால்
கைறுங்கள்கூடவருங் காசினியின்மானிடரே

ஓங்கியொருமூச்சுவிட்டு மருமூச்செழும்புமுன்னே
வாங்கிவிப்பான்றாகுதன்னை வலுப்புழுள்ளவல்லவன்றான்

இந்நகரம்நிச்சயமென் றிருந்துகொண்டுநீருமுண்டு
பொன்னகரந்தன்னைவிட்டுப் பொய்யடிக்கவேண்டாங்காண்

படைத்தேஇருக்கையிலே படைத்தோன்மவுத்துமுண்டாய்
குடியாயிருக்குதுகாண் கொண்டாட்டமேதுகண்டாய்

அஞ்சொகுத்துநேரா யறிந்துவணங்காதவர்க்கு
என்ஷபாஅத்தில்லையென் றிறசூல்நபியுரைத்தார்

காலமெல்லாந்தவுபாவைக் காட்டில்விட்டுக்காலன்வந்தால்
ஆலோசனைகள்செய்தா லாவதுண்டோமானிடரே

சந்தோஷமாயிருந்து சமர்த்துகள்பேசயிலே
வந்துவிடுமவுத்துனக்கு மாயசொரூபமதாய்

சொள்ளையுள்ளதேகஞ் சுகமாயிருக்கையிலே
உள்ளபடிதொழுதே யுடையோனைப்போற்றிடுங்கள்

சென்றுமவுத்துனக்குச் சிலேஷ்மம்வந்திழுக்கையிலே
அன்றுதொழுதீரா லாவதுண்டோமானிடரே

கூடுஞ்சனங்கூடிக் குலைந்துபோம்வாறதுபோல்
தேடுஞ்சிறுநேரத்தாசை ஜெகமெல்லாந்தீனவரே

அம்பொன்னுலோக வரம்பையர்கள்வேணுமென்றால்
நம்புகின்றவாசையெனு நாட்டம்விடவேணுங்கண்டாய்

குஞ்சுதனைக்கருடன் கொண்டுபோம்வாறதுபோல்
வஞ்சமதாய்றாகுதன்னை வாங்கிடுவார்மானிடரே

மண்ணால்நமைவகுத்தான் வலுப்பத்தால்றாகைவிட்டான்
நண்ணாய்வணங்கச்சொல்லி நபியையனுப்பிவித்தான்

தடிக்குச்சுகமேது தாரணியில்நிலையேது
நொடிக்குள்மவுத்துவரும் நோக்கிடுங்கள்மானிடரே

தொண்டைக்குழிச்சப்புந் தொலையாததாகமுமாய்க்
கண்டுவிழித்தாலுமங்கே கருத்தில்வராதுகண்டாய்

மகிழ்ந்ததுனியாவின் மயக்கத்தைநம்பாதே
புகழ்ந்துபெரியோனைப் போற்றித்தொழுதிடுங்கள்

நாமள்செய்யும்பாவமெல்லாம் நாள்தோறும்வானவர்கள்
தாமதாய்நின்றுகொண்டு தயவாயெழுதிடுவார்

பொன்னுனறாஹதுதான் புறப்பட்டுப்போகுமுன்னே
மன்னன்றனையறிந்து வணங்கிடுங்கள்மானிடரே

முன்னேயிருந்தவர்கள் முடிந்ததுவைக்கண்டீரோ
இன்னம்புவிதனிலே யிருப்பவரார்மானிடரே

வையகத்தில்நீங்கள்நன்றாய் வாழ்ந்திருக்கும்வேளையிலே
குய்யமறவுன்னுயிரைக் கொள்ளையிட்டுக்கொண்டிடுவார்

தேடியமுதல்களெதுந் தேவியருஞ்செல்வர்களும்
கூடிவராதுகண்டாய்க் குழிதனிலேமானிடரே

அழியும்புவிவாழ்க்கை யாசையதைநம்பாதே
குழிகூவியஞ்சொகுத்துங் கூப்பிட்டுநிற்குதுகாண்

தக்கதொழுகைவிட்டால் சலாமத்தங்கில்லையென்று
மக்கநபியிறசூல் வாயாலுரைத்தனரே

நாளைத்தொழுவோமென்று நாட்டம்வைக்கவேண்டாங்காண்
நாளைக்கிருப்பதுவு நாமறியோமானிடரே

தொழுகையுடனன்மைகளைத் சொல்லத்தொலையாது
எழுதிடவுந்தீராதே யென்றுநபியுரைத்தார்

கூவென்றசத்தக் குரலொடுங்கிப்போகுமுன்னே
மேவித்தவுபாவை விரும்பிடுங்கள்மானிடரே

தவுபாவுதவியினாற் றகுத்தறுஷைப்படைத்தவன்றன்
தவுபாவைக்கொண்டு தறஜாத்தைத்தந்திடுவான்

தடுக்கானசந்தாக்கிற் றாங்கிச்சுமந்துமிக
எடுக்கும்போதுங்களுக் கென்னவரப்போகுதுகாண்

கூட்டத்துனியாவைக் கொண்டாடிநம்பாதே
ஓட்டுக்கிழிக்குமுன்னே சிறப்பாய்த்தொழுதிடுங்கள்

எண்ணியடியேழ்வைக்குமுன் னிறையோன்மலக்கிறங்கிக்
கண்ணிரண்டுமக்கினிபோற் கபுறில்வந்துதோன்றிடுவார்

கடுத்துச்சினங்கொண்டு கபுறிலடிக்கையிலே
விடுத்துவிடுவார்களுண்டோ மேதினியில்மானிடரே

அல்லாவொருவன்மட்டு மழியாப்பேருள்ளவனும்
எல்லாப்படைப்புகளு மிறப்பதுவுந்தப்பாதே

மானிலத்திலேதொழுக மாட்டார்க்குநரகமென்று
நீணிறசூல்வாயாலே திருவுளமானாரே

ஹக்குடையபாதைதனை யறிந்துசலவாத்துந்
திக்கீறுஞ்செய்துகொள்வீர் தேகமிருக்கையிலே

சித்தமிரங்கிடவுஞ் செய்தகுற்றந்தீர்ந்திடவும்
சுத்தனிடமிஸ்தகுபார் சொல்லிமுறையிட்டிடுங்கள்

எடுத்தேயோர்காசளவி லேகன்பரமீந்தால்
கொடுத்தநன்மையுங்களுடன் கூடவருமானிடரே

பொய்யாந்துனியாவைப் போற்றாதேபொற்புவளர்
மெய்யானவாகிறத்தை விரும்பிடுங்கள்மானிடரே

நாயன்விடுந்தூதும் நாழிகையும்வந்துதென்றால்
மாயசொரூபமதாய் மவுத்துவந்துதோன்றிடுங்காண்

தூவக்கமுடிவில்லாவ தூய்யோன்தொழுகைதனை
எவர்க்கும்விதியாகு மிதைவிடவும்வேண்டாங்காண்

மலக்கல்மவுத்தருகே வந்துயிரைவாங்குமப்போ
வலுக்கமுழித்தாலுமங்கே வாங்காமலேகார்காண்

தூவக்கத்தொழுகையிங்கே துப்புரவாயப்புறம்போய்
சுவர்க்கத்தலங்காட்டுந் துன்யாவில்மானிடரே

சக்ருத்தடுத்துமுன்னே சஹீசக்காத்தீந்திடுங்கள்
எக்காலுநீங்கள்சும்மா யிருப்பமென்றெண்ணவேண்டாம்

சந்தப்புவியாசை சதமென்றுநம்பாதே
எந்தவகுத்தோமவுத்திங் கெவர்க்குந்தெரியாதுகண்டாய்

கத்தன்றொழுகைதனைக் கலாவாக்கிப்போடாமல்
நித்தம்வகுத்துடனே நேராய்த்தொழுதிடுங்கள்

அடுத்தமவுத்ததனை யாகும்ஷருபத்தென்றே
குடித்தேயிருக்குகிறோங் கொண்டாட்டமேதுகண்டாய்

உண்மையுள்ளஆலநபி யோதும்அருட்படியே
நன்மைசெய்துசுவற்கத்தை நாடிடுங்கள்மானிடரே

புலிபோலுயிரைவந்து பிடித்துவலிக்குமுன்னே
கெலியாய்த்தொழுதிடுங்கள் கிருபையுண்டாஞ்சொல்லுகிறேன்

பையிருக்கக்கட்டிவைத்த பணம்போகும்வாறுதுபோல்
மெய்பிருக்கறாகுமட்டும் விட்டோடிப்போகுங்கண்டாய்

சோதியுடன்பேசுநபி சொல்லிப்பிணைநின்றுவந்த
ஆதிதொழுகைதனை அசடெண்ணவேண்டாங்காண்

ஆஷிக்கைத்தொட்டு மஞ்சாமலைந்தும்விட்டுத்
தோஷிக்குங்கீழாய்த் தோன்றிடவும்வேண்டாங்காண்

வீறுய்த்தொழுதவர்க்கு மின்னலிடுகூறுலீன்கள்
மாராயங்கொண்டெதிரே வந்துநிற்பார்மானிடரே

உசந்தவனுப்பத்துக் குடையோனுலகமெல்லாம்
இசைந்தேயோர்முட்டையைப்போ லேந்தியிருக்குகின்றான்

ஹக்குடையவல்லபங்க ளாக்கவழிக்கவல்லான்
எக்காலமுள்ளவனை யென்றுந்தொழுதிடுங்கள்

என்னைவணங்காதா ரிவ்வுலகும்வானகமும்
தன்னைவிட்டுப்போங்களென்று தனியோன்வகுத்தானே

எனக்குஞ்சுகூதுசெய்யா ரென்கீதாறெற்றுமற்
சினக்குநரகத்திற்கே சேதப்படுவரென்றான்

என்னையுவந்தவரை யானுமுவந்திருப்பேன்
என்னைமறந்தவரை யானும்மறப்பேனென்றான்

திட்டமுடன்வணக்கஞ் செய்யாதபாவியர்கள்
வெட்டிக்குடியிருக்க வேண்டாமென்றோதினனே

நிருதிபிரகார நித்தந்தொழுதுவந்தாற்
பகுதியவன்கொடுத்துப் பலன்சேருமானிடரே

பணமேதுவாழ்வேது பாராசைவிட்டொழிந்தால்
க்ஷணமேமவுத்துவரும் ஜகத்திலுள்ளமானிடரே

வல்லபெரியோனை மானிலத்திலேதொழுது
நல்லஅமல்செய்திடுங்கள் நாளைப்பதவியுண்டாம்

முழித்திங்கிருக்கையிலே முதலோன்மலக்குவந்து
விருத்துயிரைவாங்கிடுவார் மேதினியில்மானிடரே

தொழமாட்டேனென்றதனாற் றோசியிபுலீசென்றே
எழுவானைவிட்டவனை யிப்புவியிலீழ்த்தெறிந்தான்

மனதில்மிகப்பயந்து மவுத்துண்டென்றேநினைத்து
நினைவாகவைந்தொகுத்தும் நிறைவேற்றிக்கொண்டிடுங்கள்

இருகரத்திலேந்திநீ ரெடுத்துக்குடிக்குமுன்னே
வருமலக்குன்னுயிரை வாங்கிடுவார்மானிடரே

வம்பனிபுலீசு மாயவலைக்குள்ளாகித்
துன்பநரகமதிற் றோன்றிடவும்வேண்டாங்காண்

பறுலுவாஜிபுசுன்னத்துப் பார்த்துவணங்காமல்
விறுதாவிற்பாடுபட வேண்டாங்காண்மானிடரே

மகுசறமளிதனை மறந்துவிடவேண்டாங்காண்
பகையானநாளுமுன்றன் பக்கம்வருகுதுகாண்

அதபாய்த்தொழுதுகொண்டா லதுதான்மகுசறிலே
உதவியாய்வந்துநிற்கு முண்மைகொள்ளுமானிடரே

சிந்தைதனிலீமானைத் திட்டமுடனிறுத்திவைத்து
அந்திகாலமதுக்கே ஆதரவுதேடிடுங்கள்

ஒடுக்கமவுத்துநிசா னான்றியநாளெழுதுமுன்னே
அடுக்குங்கியாமத்துக் காதரவுதேடிடுங்கள்

தன்னையறிந்தேயொரு தலைவனையுந்தானறிந்து
ஜென்னத்துக்காதரவாஞ் சிறப்பாய்த்தொழுதிடுங்கள்

ஓயாதபேராசை யொடுக்கமழிந்துவிடும்
காயம்நிலையாது காசினியில்மானிடரே

மனுவைப்படைத்ததெல்லாம் வணக்கத்துக்காகவென
நினைவாகவைந்தொகுத்தும் நிறைவேற்றிக்கொண்டிடுங்கள்

உறுப்புறுப்பெல்லாம் வோடியொளித்தாலும்
குறிபோட்டுன்னுயிரைக் கொண்டோடிப்போய்விடுவார்

மவுத்துலகான்கொடுத்து வாயிலிழுக்குமுன்னே
யாகத்திற் றொழுதுகெஞ்சி யதனையறிந்திடுங்கள்

கல்புகொண்டஞ்சிக் கருத்தில்வணங்காதார்
இல்மாளியானாலு மென்னபலனென்றுரைத்தார்

பட்டோலைக்கணக்கும் வானவரைத்தானிறுத்தி
திட்டமுடனைத் தெண்டிக்கும்வல்லவனும்

வானமட்டும்பூமிமட்டும் வாழ்ந்திருந்தாலுமென்ன
தானென்றொழுகைதனைத் தப்பிவிட்டாலில்லைகண்டாய்

வாய்கொண்டுபேசையிலே வாங்கிவைப்பாறாகுதன்னை
நாயனுடவல்லபங்க ளுமறியோர்மானிடரே

தக்கஷபா அத்துந் தனியவன்தீதாறும்
சொற்க்கத்தலமேதென்று தூஷணிக்கவேண்டாங்காண்

தொழுகைமறந்தவர்கள் சுவர்க்கப்பலனிழந்தார்
பழுதறவேநீங்களஞ்சிப் பயந்துதொழுதிடுங்கள்

தனிக்குழியுந்தானுந் தனித்தாற்றெரியுமங்கே
நினைத்தாற்பயம்பெரிதே நிதங்கேளுமானிடரே

மிகுறாஜிற்சென்றுநபி வெகுவிதத்தில்மன்றாடி
முகிவாகச்செய்துவந்த முதற்றொழுகைமானிடரே

பெருப்பமுள்ளிற்கொண்டே பெரியோன்றொழுகைதனை
நிரப்பமுடன்றொழுது நிறைவேற்றிக்கொண்டிடுங்கள்

வல்லான்மவுத்துமொரு மாயமாகவந்துவிடும்
நல்லாய்த்தெரிந்துதொழு நானிலத்தில்மானிடரே

புறக்கானல்வேதந்தனைப் புகழ்ந்தேயதைநோக்கி
நெறியாயதின்படியே நினைத்துத்தொழுதிடுங்கள்

சுமக்கும்புவிக்கொளிவு சொல்விடவுந்திட்டமுண்டு
நமக்குமதுதானுமில்லை நானிலத்தில்மானிடரே

மவுத்தையொருபேரணியாய் வகுத்துவிட்டானுண்டவனும்
விகித்தமுடன்வல்லமையை மெய்காவல்போட்டுவைத்தான்

ரவ்வுபகலதற்க்கு நாழிகையுமிலக்கமுண்டே
அவ்வளவுநமக்கில்லையென் றறிந்துகொளுமானிடரே

என்னைமறந்துமுன்னே யென்றொழுகைவிட்டபழி
தன்னைவிட்டுப்போகாதென்று தணித்தால்தெரியுமென்றான்

எப்படைப்புந்தானளித்தே இருந்துசெங்கோல்செலுத்தும்
றப்புவென்றேயறிந்து நாடித்தொழுதிடுங்கள்

கியாமம்வரலாறுகிட்ட வருகுதென்றேயறிந்து
தயாருயிருந்திடுங்கள் தரணிதனில்மானிடரே

இன்றுபுவியாசை யிதுசதமோசொல்லுகிறேன்
அன்றுதனிக்குழிக் காதரவுதேடிடுங்கள்

மக்களுறவினமுறைவாழ்வுபிறியமெல்லாம்
ஒக்கவராதுகண்டா யுண்மைகொள்ளுமானிடரே

மண்ணாசைபெண்ணாசை மாலாசையித்தனையும்
கண்ணாசைச்சும்மாதான் காலம்வரிலேதுகண்டாய்

அவனிப்பெருக்கமெல்லா மேதுகடைசியிலே
கபனிலொடுக்கங்கண்டாய் காசினியில்மானிடரே

சபுறில்லாப்பேராசை தாண்டியெழும்புமுதல்
கபுறிலுரைகொடுக்கக் கனத்தநன்மைசெய்திடுங்கள்

ஆனாலுநீங்க ளஞ்சிப்பயந்தோதித்
தானோன்றனைப்பயந்து தனித்தேயிருந்திடுங்கள்

வெல்லுந்தொழுகையமல் மீண்டுவிடுமாகிறத்தில்
வல்லோன்சமுகமதில் மன்றாடுமானிடரே

பேச்சுமவன்மூச்சுமவன் பேசுவதெல்லாமவனே
சூக்ஷமவனாலே சொல்லக்கேள்மானிடரே

பாம்பானபூமியிதைப் பலனென்றேயெண்ணாதே
சாம்போதுதானுமதி சதிசெய்துபோட்டிடுங்காண்

ஒக்கவிறந்திடுவா ரொக்குமுயிர்வாங்கிடுவர்
ஹக்கனுடவல்லபங்க ளாரறிவார்மானிடரே

ஒளிவுதனிற்பிரிந்த வுண்மையிறசூல்மொழிந்த
தொழுகைதனைமறந்து தூஷணிக்கவேண்டாங்காண்

ஒடுக்கம்ஸக்கருத்தி லுத்தமங்கள்காட்டிடவும்
திடுக்கமறநல்அமலைத் திட்டமுடன்செய்திடுங்கள்

அவூதுபில்லாகியென்றே யறைந்தபெரியவனின்
தவுஹீதுக்கோட்டைக்குள்ளே தான்புகுந்துகொண்டிடுங்கள்

கரிந்தேயெரிநரகிற் கனத்தநெருப்பதற்கு
மருந்துதொழுகைகண்டாய் வையகத்தில்மானிடரே
துனியாவைப்போதுமென்று தோத்திரத்தைவிட்டுவிட்டால்
அனியாயமாய்நரகி லழிவதுவுந்தப்பாதே
நிஃரிலடங்காது நிசமான்றனையறிய
மகரிபத்துச்சோலைக்குள்ளே வந்துநுழைந்திடுங்கள்
மவுத்துவருமுன்னே வழிச்செலவுக்காதாரம்
பகுத்தறிந்துதேடிநல்ல பதஞ்சேருமானிடரே
தேகமொருபட்டமுமாய்த் திட்டமுடனாடிவிட்டு
ஆகியபின்சூட்சமதை யறுத்தெரிவான்போய்விடுங்காண்
ஈமான்றனக்காக இருதயத்திலிச்சைவைத்தால்
நாமானமாகறப்பை நாடியறிந்திடுவீர்
பதியிலுள்ளமானிடரே படைத்தவனாலேவிவிட்ட
விதியையெவராலும் விலக்கிடவுந்தீராதே

சென்னை-600

தோத்திரமாய்வந்த தொழுகைநிகழாமல்
ஆத்துமத்திலேதொழுதே யஞ்சிப்புகழ்ந்திடுங்கள்

இக்கரையில்ஹக்குடைய ஏவல்களைமறந்து
அக்கரையிற்போனபின் பார்துணையாமானிடரே

முழுக்கிறுக்கபேணி முதலோன்கடன்கழிய
வெளுக்குமுன்னேயஞ்சி விரும்பித்தொழுதிடுங்கள்

ஓடமெனுங்கலிமாவை யோதாமல்வேறேனுந்
தேடினதாலென்னபலன் சிக்கிடுங்காண்மானிடரே

ஹக்கையறிந்துகொண்டா லதுவிபரஞ்சொல்லுகிறேன்
தக்கவடவாய்க்கடந்து ஷாஅத்தும்பெற்றிடுவீர்

நாலாறெழுத்தையுற்று நன்றாய்த்தெரிந்துணர்ந்து
மேலவனையஞ்சொகுத்து மேவித்தொழுதிடுங்கள்

ஒருத்துவருமுன்னே யுளுவுடனேநின்றேயோர்
வருத்தவனையாதுவைத்து மகிழ்ந்துதொழுதிடுங்கள்

இந்நிலத்திலாண்பெண் ணெவருந்தொழுகைவிட்டு
என்னநன்மைசெய்தாலு மேதுபலனென்றுரைத்தார்

மனையிலிருந்துங்கள் மணவாளனையுஞ்சங்கைவைத்து
நினைவாகவைந்தொகுத்தும் நிறைவேற்றும்நேரிழையே

உடுத்திருந்ததுகி லுடைமைமுதலனைத்தும்
எடுத்தெறியும்காலன்வந்தா லேதுமுதவாதுகண்டாய்

இருமூன்றிநாலு ஈராறுபதினாலும்
மருசங்குட்டீர்ந்தவுடன் மாதேதொழுதிடுங்கள்

பாவியரையீடேற்றும் பாத்திமாநாயகியும்
மேவிப்பிணைநின்றுவந்த விதிதொழுகைமாதர்களே
இந்தப்படிதொழுது வாராதவேந்திழைக்கு
முந்திநபிமகளார் மொழிந்தஷபாஅத்தில்லையென்று
முத்தாலேமாளிகையு முன்னற்சுமந்திருக்க
எத்தாமல்நீங்கள்சும்மா யிருந்திடவும்வேண்டாங்காண்
நன்மைதீமையெல்லாம் நாளைக்குவிளங்குமப்போ
நன்மைவந்துமுன்னில்நிற்கு நாட்டிலுள்ளமானிடரே
சிறந்ததொழுகைதனைச் செய்யப்பெலனில்லாவிட்டால்
இருந்தாகிலுந்தொழுதே இபாதத்தச்செய்திடுங்கள்
முதலோனறிருக்கலிமா முடிவிலுதவிடவே
இதமானநன்மைசெய்தே ஏற்கநடந்திடுங்கள்
இந்தமொழிசொல்லிடினு மில்லல்லாவென்பதுவும்
உந்தனடைக்கலமென் றோதிடுங்கள்மானிடரே

கூறுகின்றவெள்ளிதனிற் குதுபாவைவிட்டவர்கள்
ஏறுகின்றபள்ளியதை யிடித்தெறிந்தபாவியென்றார்

ஈனமறப்புவியி லிருக்கின்றமானிடரே
நானென்றசொல்லைமட்டு நாவில்மறந்திடுங்கள்

நோவின்றிறமலானில் நோன்புகளைவிட்டவர்கள்
பாவமெழுதப்பனை யோலையெல்லாம்பற்றாதே

ஈரிரண்டுவேதமதை யெவரும்பழித்தாலும்
பேர்கொண்டசொர்க்கமதைப் பெறமாட்டார்மானிடரே

எதுகருமமானாலு மெந்நாளுமாகுமென்று
விதியொன்றனைமறந்து விளம்பிடவும்வேண்டாங்காண்

நன்மைதனக்காக நடந்தோதியேயெடுத்தே
இம்மைதனில்வந்தாலு மிசைநாலுநன்மையுண்டாம்

அல்லாமுகம்மதுட னனநபிமார்களையும்
நல்லாய்புகழ்ந்திடுங்கள் நாட்டிலுள்ளமானிடரே

அசனுருசைநாரை யானவுலமாக்களையும்
பிசகாமலெந்நாளும் பேணிப்புகழ்ந்திடுங்கள்

மீராமுகியித்தீனை விரும்பிமிகப்போற்றி
நேராய்ப்புகழ்ந்திடுங்க ளீனிலத்தில்மானிடரே

சங்கையுள்ளசையிதுமார் சாகிபுமார்தங்களையும்
பங்கமறப்போற்றிநன்றாய்ப் பணிவிடைகள்செய்திடுங்கள்

மூரீதுமார்தங்களையு முன்பணிந்துகாட்சிசெய்து
பெரிதாகச்சங்கைவைத்துப் பேணிநடந்திடுங்கள்

ஹச்சுக்குப்போய்வந் தவர்கள்மனநோவத்
துச்சணங்கள்பேசிமிகத் தூஷணிக்கவேண்டாங்காண்

மாயைப்புவியுள்ள மானிடரேயுங்களுட
தாய்தந்தையுஸ்தாதைத் தாழ்ச்சிசெய்துபோற்றிடுங்கள்

பூந்தவொளிவிற்பிரிந்த முகம்மதுர்றசூல்பொருட்டால்
எந்தன்பிழைபொறுத்தே ஈடேற்றுறகுமானே

ஆலமெல்லாம்போற்றுகின்ற ஆலநபிதன்கலிமாத்
தாலமதிலெந்நாளுந் தழைத்தோங்கிவாழியவே

கற்றோருங்கேட்டோருங் கருதிநடந்தோரும்
சித்தனருள்பெற்றுமிக நீடூழிவாழியவே.

தொழுகைநாமா-முற்றிற்று.

——:*:——

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றஹீம்.

இஃது

காசிம்புலவரவர்கள்பாடிய

# இன்னிசை.

---

காப்பு.

முன்னவனே அஹதியத்தாய் முத்தியுஹதத்தாகிப்
பின்னவனேவாஹிதிய்யாய்ப் போனமெய்ப்பொருளே
தன்னவனே தயாபரனே சராசரமாய்நின்றவனே
மன்னவனேயின்னிசைக்க வல்லவநீகாப்பாமே.

ஆதியொளிவாகியகி ரண்டபகிரண்டமொரு
சோதியொளிவாகிநின்ற தூண்டாமணிவிளக்கே
ஓதியுணர்ஞானகலை யோலமிடும்செய்பிதப்துல்
காதிறேநல்ஹாசிங்குல காசிமுஸ்தபாநபியே.

மெய்யெடுத்தநாள்முதலாய் மெய்யறியேன்வெட்டவெறும்
பொய்யெடுத்தபாவியையும் பொன்னடிக்காட்கொள்வீரே
மையெடுத்தசோனைமழை மாரிவெள்ளந்தாவதுஆக்
கையெடுத்துவேண்டுமக்கா காசிமுஸ்தபாநபியே.

பொய்மாறவென்றொருகாற் பொங்குபசும்புண்ணழற்ற
மைமாறவேயருட்கண் வைத்திடுநாளெந்நாளோ
பெய்மாரிநோக்கியிந்தப்பேருலகம்வேறுமொரு
கைம்மாறுசெய்வதுண்டோ காசிமுஸ்தபாநபியே.

பூக்குந்தடனிழலும் பூவாதுபூவின்முகில்
ஆக்குங்குடையுமன்பி யாக்களுக்குமுண்டாமோ
போக்குங்கொடுந்துயரம் பொறுக்குப்பொறையபயங்
காக்குங்கருணைசமக்கா காசிமுஸ்தபாநபியே.

ஒருகாலமும்மனுகா வொருகால்பிணியகல
வருகாலமெக்காலம் வருகாலறியேனே
குருகாலுஞ்செங்கையொரு கோதைதசையூட்டிவைத்த
கருகாலமுண்டவெங்கள் காசிமுஸ்தபாநபியே.

சங்கைபடைத்தவொரு தாய்கண்மகன்றனிழர்த
வங்கைபடைத்ததிற மார்க்குஞ்செயவுண்டாமோ
கொங்கைபடைத்தவஞ்சிக் கொப்போடுந்தாருவரக்
கங்கைபடைத்தவெங்கள் காசிமுஸ்தபாநபியே.

கோலூற்றமன்னரிட்ட கோட்டைபதினைங்குமொன்னார்
வேலூற்றமானசமர் வென்றுதங்கைக்கொண்டோரே
பாலூற்றுநீலாற்றுப் பள்ளவெள்ளம்வெள்ளியணைக்
காலூற்றுமக்கநகர் காசிமுஸ்த்பாநபியே

வென்றேறும்வேலரசர் வீரமுடியாசனத்திற்
சென்றேறுங்கஞ்சமலர்ச் சேவடிதந்தாளுமையா
நன்றேறுமுத்திதரு ஞானக்கொழுந்தேதுளசிக்
கன்றேதண்சோலைமக்கா காசிமுஸ்தபாநபியே

ஐதூக்குங்கையினகன் றுள்வேட்டமாடுமழை
மைதூக்கும்போதரிக்கண் மாதருக்காளாவேனோ
பைதூக்கும்பாந்தளுணைப் பாழ்நரகம்புக்காமற்
கைதூக்கிகொள்ளுமக்கா காசிமுஸ்தபாநபியே

வேட்டுங்கனவிலொரு வேளைவெளியாகவந்து
நாட்டும்பரகெதியு நல்கிடுநாளெந்நாளோ
தீட்டும்புகழாபரண தீன்தீன்முஹம்மதெனக்
நாட்டுங்கதிகோட்டுமக்கா காசிமுஸ்தபாநபியே

விண்பார்க்கும்சாதகம்போல் வேண்டியுமைமீண்டுமிசைப்
பண்பார்க்கும்சேணசுணப் பட்சியெனவுந்தேடி
எண்பார்க்கும்மேழைதனக் கேயிரங்கியெவ்வளவுங்
கண்பார்த்தருளுமக்கா காசிமுஸ்தபாநபியே

பூரியனேயென்னொருகால் புண்ணிருந்துநொந்தழற்ற
வீரியமேபொன்றியுள்ளம் விள்ளாதயர்வேனோ
பேரியபேர்கொண்டவுங்கள் பேருடையோனுக்குவரக்
காரியமேன்ஹாசிங்குலகாசி முஸ்தபாநபியே

முள்ளாறுங்கல்லாறு மூழ்கிப்பரந்தவெள்ளக்
துள்ளாறுமான்காட்ட வுந்துகரைகண்டோரே
புள்ளாறுகாலுளப்பப் பூஞ்சோலைபூவிரிந்து
கள்ளாறுபாயும்மக்கா காசிமுஸ்தபாநபியே

பால்சாய்க்கும்வெள்ளைவட்டப் பாரரசர்வீரமுரண்
வேல்சாய்க்கும்வெற்றிகொண்ட வேதாந்தத்துட்பொருளே
சேல்சாய்க்குமுட்புறக்காய் செவ்வாழைக்குலைவரம்பிற்
கால்சாய்க்குமக்கநகர் காசிமுஸ்தபாநபியே

பாணியாய்த்தண்ணளிக்கண் பார்த்தெவ்வுயிர்க்கும்புகல்
ஆணியாய்த்தன்னுயிர்போ லாளுங்கருணேசே
ஏணியாய்க்கடந்தறுஷி லேகனைக்கண்டெட்டுசொர்க்கங்
காணியாய்க்கொண்டவெங்கள் காசிமுஸ்தபாநபியே

நத்தூரியகுளத்தி னாமின்றிநாட்டியவம்
புத்தூரினின்றவெள்ளம் பொங்கிவரத்தானழைத்திர்
முத்தூரியகுடையில் மூவுலகுங்காக்குமெய்பிற்
கத்தூரிவாடைகமழ் காசிமுஸ்தபாநபியே

வேலேறுமுட்குடைவேல் வெய்யசிலைவேடனுக்காய்
மாலேறுநின்றுசலாம் வந்துசொலவிண்டோரே
கோலேறிருலளிதேன் குண்டேர்ந்துவந்துகொடிக்
காலேறுமக்கநகர் காசிமுஸ்தபாநபியே

மட்டேரைம்பாலளக மாணிக்கப்பொற்கொப்பையெட்டித்
தொட்டேர்கருங்கயற்கட் டோகையர்க்காவேனே
வெட்டேரங்களப்போர் வென்றதற்பின்மூன்றுபகல்
கட்டேரமர்ந்துவருங் காசிமுஸ்தபாநபியே

சேந்தமட்டும்வாய்ந்தபகத் தெப்பந்தொட்டேன்பாவவெள்ள
நீந்தமட்டும்போந்துசற்றே நின்றுகரையேற்றுமையா
சாந்தமட்டும்கஸ்தூரி சாலமணமேவுமெண்டி
காந்தமட்டும்வீசும்புய காசிமுஸ்தபாநபியே

வெற்பூருமற்புயமும் வெண்ணகையுமுத்திரையும்
பொற்பூர்முகாம்புயமும் பொன்னடியுங்காணேனே
அற்பூருமின்சொன்மறை யாரமிர்தச்செவ்வாயிற்
கற்பூரவாடைகமழ் காசிமுஸ்தபாநபியே

போரூருஞ்செவ்வேற்கண் பொருதுமடவார்நிதம்பத்
தேரூருங்கோட்டாறுந் தேடிமெலிவேனே
நீரூரும்பாரூரு நின்றாருஞ்சீருடைய
காரூருஞ்செங்கையெங்கள் காசிமுஸ்தபாநபியே

ஊசிமேனாட்கனிந்தாங் குளதாயிஷாமனையிற்
றூசிமேநும்மொளிவாற் றூன்கவரநின்றேரே
வீசிமேற்கொழுந்தோடி விண்பூத்தலர்ந்தபுகழ்
காசிமேஹாஷிங்குலகாசி முஸ்தபாநபியே

விண்ணின் மணியேபொருளே வெணமணியேரத்தினமே
எண்ணின் மணியேகுருவே யெவ்வுயிர்க்குந்தாயகமே
மண்ணின் மணியேதருவே வாய்ந்தவுலகேழும்புகழ்
கண்ணின் மணியேநிதியே காசிமுஸ்தபாநபியே

கோடுபடுஞ்செம்பவளக் கொம்பனார்கண்வலைப்பட்
டுபடும்பாவியையீ டேற்றுவதுமெந்நாளோ
பீடுபடுந்தேறற்பெருக் காறுவட்டுஞ்செந்நெற்
காடுபடுமக்கநகர் காசிமுஸ்தபாநபியே

பூவாரணமுகத்தே புக்கியிறந்தாலுமுயிர்
நாவாரணமுகத்திற் சஞ்சலிக்கக்கூடாதே
பாவாரணமுகைக்கும் பைம்பொனகர்கற்பகப்பூங்
காவாரணமுகைக்கும் காசிமுஸ்தபாநபியே

மாகபடாமிட்டவிழி மாயவலைப்பட்டுழன்று
பூகபடாமிட்டதனப் பூவையர்க்காளாவேனோ
வேகபடாமிட்டமுத வேழமன்னர்மாளவெட்டிக்
காகபடாமிட்டவைவேற் காசிமுஸ்தபாநபியே

பாம்போதியன்றுமது பாதாம்புயம்பணிந்து
வீம்போதிவந்துசலாம் விண்டுசொலநின்றேரே
பூம்போதிலஞ்சிறைப்பூம் புள்ளியுடைப்புள்ளினங்கள்
காம்போதிபாடுமக்கா காசிமுஸ்தபாநபியே

சேல்பிடித்தபுண்டேர்ந்து தெரித்திரநோயுந்தீர்ந்து
மால்பிடித்தசஞ்சலமு மற்றுமொழியேனோ
பால்பிடித்தசிந்தை பராக்கோபரமடையக்
கால்பிடித்தேன்கண்ணில்வைத்தேன் காசிமுஸ்தபாநபியே

நீயிரந்நாளொளிவாய் நித்தியமாய்மாமயிலாய்
மாயிருஞாலத்திற்றின் வந்தநபீரலவோ
பாயிரநாமத்தோங்கும் பரனுமத்தொன்றொழிய
வாயிரநாமத்துடையீர் ஆலநபியுல்லாவே

நீலவட்டமானீந்தி நிலவுவட்டமொன்றுவரத்
தாலவட்டமீதில்ரண்டு சந்த்ரவட்டமாக்கிவிட்டீர்
காலவட்டமோங்குமுச்சிக் கதிரோற்குத்தான்கதலி
ஆலவட்டம்வீசுமக்கத் தாலநபியுல்லாவே

துக்கரணபாதகங்க ணேண்டுகலிதீண்டாமற்
சக்கரவாளந்தாண்ட சாபித்தெனையாண்டுகொள்வீர்

செக்கரளகேசசெல்வ சித்திமுத்திதந்துழுவெட்
டக்கரந்தந்தாளுமக்கத் தாலநபியுல்லாவே

போற்றுவராராத்மாவைப் பொறுப்பவரார்செய்தகுற்றத்
தேற்றுவரார்மனப்பீடை தெரித்திரநோய்பாவமற
மாற்றுவரார்வல்லோன்முன் மன்றுடிச்சொற்கபதி
ஆற்றுவராரும்மையல்லால் ஆலநபியுல்லாவே

பாதவனந்தாவனத்துப் பாரிசல்மான்பாரிசுக்காய்ச்
சீதவனந்தான்சிதறச் சீமுதம்பெய்வித்தோரே
மாதவனந்தந்தகரு பாவைவலங்கொண்டுதிங்கள்
ஆதவனந்தோடுமக்கத் தாலநபியுல்லாவே

கூனிருல்பாய்ந்துவெளிக் குண்டமுகடுடுருவித்
தேனிருல்கீறிவழி தேனூறுவட்டொழுகிக்
கானிருறுவளரும் கன்னியிளவாழைநிழல்
ஆனிருறுஞ்சுமக்கத் தாலநபியுல்லாவே

கூம்பூடுபாய்விரித்துக் கூன்பிறையவங்கமுந்நீர்
தாம்பூடுபாய்ந்துலவத் தான்பொருப்பிற்றந்தோரே
வீம்பூடுபோனவுயிர் மீட்டமிர்தசஞ்சீவி
யாம்பூடுபோன்றமக்கத் தாலநபியுல்லாவே

மூசாபயித்துல்மகு மூறிற்சொற்றசொற்சேரக்
கோசாலமாய்நிறுத்திக் கொண்டிறைமுன்சென்றோரே
வாசாமகோசரமாய் வந்தகுறுஆன்வழிதீன்
ஆசாரமாய்நடத்தும் ஆலநபியுல்லாவே

பாசனலனேதும் படைத்திலேனுடையபவம்
மோசனமாகும்படிக்கே மோட்சந்தரவேண்டுமையா
மாசனமாகும்புகழ வல்லோனறுசினிற்சிங்
காசனமேலேறுமக்கக் தாலநபியுல்லாவே

தாறலைவில்வீசியபூந் தண்டலையினூடுடும்பு
வேறலைவிலாமனுமை வேண்டிவசனித்ததனாற்
பேறலைவிலாதவொரு பேரின்பக்கலிமாவை
ஆறலைவில்வேடற்கரு ளாவநபியுல்லாவே

இன்னிசை-முற்றிற்று.

விற்பூட்டுப்பின்முடுகுகாட்சிவெண்பா.

கண்டேன்கலியாரக் கலிகடந்தேன்கைவிலையாய்க்
கொண்டேகவர்க்கபலன் கொண்டேனே-பண்டு
வடிவமைத்தநிலவுபச்சை மரகதப்பொன்மயில்வனத்தர்
தடவரைக்கண்டிபதித்ததாள்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

செய்கப்துல்காதிர் நயினார்லப்பை

ஆலிம்புலவரவர்கள் பாடிய

# இன்னிசை.

பூவுலகுவாசம் பொருந்தியபோலெவ்வுயிர்க்கும்
பாவுலவுமாதி பராபரன்முன்னன்மணியாய்
மேவுலவியெல்லா மிகவாகவந்துதித்த
மூவுலகுங்காக்கு முகம்மதுர்றசூல்நபியே.

சித்தமனவஞ்சகமு நெறிகேடுந்தீவினையும்
பத்தியுடன்பூண்டசிறு பையன்முகம்பார்த்தருள்வீர்
கத்தனருளாலடியோர் கவலையறக்காத்தளிக்கு
முத்தியுயர்மக்கா முகம்மதுர்றசூல்நபியே.

என்போலேபாவியர்க ளெத்தனைபேரானாலும்
உன்போற்கிருபையுள்ளா ரொருவரையுங்காணேனே
பொன்போலருமணிபோற் பூங்கனிபோல்யாவருக்கு
மூன்போலுதித்த முகம்மதுர்றசூல்நபியே.

வாதாடுங்கள்ளமன வஞ்சியர்கள்கஞ்சமுக
மீதாடுமாசைவெள்ள மேலாடலெவ்விதமோ
கோதாடுபுன்காபிர் கொண்டநிலைப்புண்டுவிழ
மூதாடுமின்சொன் முகம்மதுர்றசூல்நபியே.

ஊரார்மனநோவ வுற்றார்மனநோவப்
பேரார்மனநோவப் பேதகத்தார்போகாரோ
சீரார்மறைநாவின் செங்கனியாவிவ்வுலகை
மூரார்புகழின்மக்கா முகம்மதுர்றசூல்நபியே.

வன்மதியார்செய்வினையால் வண்மையிலாதாகமிகப்
புன்மதியாலெண்ணியெண்ணிப் பொங்கியுளம்வாடுவனோ
நன்மதியேபூம்பாத நாடிவந்துதாழ்ச்சிசெய்யு
முன்மதியேபேருளே முகம்மதுர்றசூல்நபியே.

இழுக்காளர்வஞ்சநெறிக் கெட்டாமல்வந்தகொரு
வழுக்காளர்மாண்டமன வாடைகொண்டுசூடாரோ
மழைக்காலசுகாபி வாய்ந்தவமைமட்டாக
முழுக்காரணங்காட்டு முகம்மதுர்றசூல்நபியே.

வேதநெறியாகியுரை வித்தாகமுத்திலில்
பேதநெறியென்றவொன்னார் போலேந்துபாராரோ
காதநெறிவீசுமுயர் கஸ்தூரிமேனியுங்கள்
ஊதறிவுநல்கு முகம்மதுர்றசூல்நபியே.

திக்கலருங்கீர்த்திமதி செல்வமுடன்பெற்றாலும்
ஹக்கனருள்பெற்று மருள்பெருதலெவ்விதமோ
மக்கநகர்வந்து மதீனநகர்நல்லரசு
முக்கியமாய்கின்றவெங்கள் முகம்மதுர்றசூல்நபியே

மறையோர்நெறியோர் வழியோர்மொழிக்கிழிவே
குறையோர்குறைநோய்கள் கொண்டலைவதெந்நாளோ
நிறையோர்சபையிலும்மை நிந்தைசெய்தோரவர்காணும்
முறையோதும்மெங்கள் முகம்மதுர்றசூல்நபியே.

தீங்குடையவஞ்சகர்தஞ் செய்கையினாலுள்ளயர்ந்து
பாங்குடனேயென்நாளும் பரதவிப்பதெவ்விதமோ
தேங்கமழுங்குங்குமப்பூஞ் செழும்புயத்தீர்வாய்வழங்கா
ஊங்கனுய்யக்காத்தருளு முகம்மதுர்றசூல்நபியே.

பொற்காட்டுநன்மேனிப் புன்காவிதந்தநகை
வற்காட்டிக்கண்காட்டும் வஞ்சியர்க்காளாவேனோ
விற்காட்டும்வெள்ளிமுடி மேற்காட்டிச்சிபுரீற்கு
முற்காட்டுஊப்புடைய முகம்மதுர்றசூல்நபியே.

பொய்யுரையுஞ்சூதும் பொல்லாங்குநிந்தனையுங்
கையுரைகோளுந்துனியா சையுரையிலாவேனோ
பையுரகம்பேசிப் பணிந்தழகுபெற்றுவர
மொய்யுரைகொடுத்தாளு முகம்மதுர்றசூல்நபியே.

சழக்குடையமேன்மைகொண்டு சார்புபற்றிப்பொய்கொண்டே
வழக்குரைக்குமொன்னார் மதிக்கேற்பதெவ்வினையோ
உழக்கரைகொண்மாவதனா லோராயிரர்க்குமுணா
முழக்கிவித்தகாரணத்தின் முகம்மதுர்றசூல்நபியே.

வேட்டமுறமேவும் விபரமுடன்கொஞ்சிநயங்
காட்டமுதவாய்மடவார் கண்வலைப்பட்டேங்குவனோ
காட்டகத்தின்வேடன்மதி காணப்புவிநேர்வழியே
ஊட்டவருண்ஊட்டிவித்த முகம்மதுர்றகுல்நபியே.

புன்னெஞ்சிரக்கமில்லாப் பொய்யுரையார்பாலிற்சென்றென்
னன்னெஞ்சினாவலெல்லா நச்சியிடலெவ்விதமோ
கன்னெஞ்சிற்கொண்டோரைக் கைதாங்கும்வள்ளலுக்கு
முன்னெஞ்சுனைத்தழைக்கு முகம்மதுர்றசூல்நபியே.

நபியுல்லாபேரில் இன்னிசை-முற்றிற்று.

147994
சென்னை-600

# விளம்பரம்.

———:*:———

| | | | |
|---|---|---|---|
| சீராகீர்த்தனை | 2 | 0 | 0 |
| சீராபாட்டு உரை முதற்பாகம் | 3 | 8 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 3 | 8 | 0 |
| கசசுலன்பியா ரப்பு | 1 | 8 | 0 |
| ஷை திக்கு | 3 | 0 | 0 |
| நேர்வழிதீன்மொழி ரப்பு | 1 | 8 | 0 |
| ஷை திக்கு | 2 | 0 | 0 |
| வெள்ளாட்டிமசாலா | 0 | 12 | 0 |
| ஷை திக்கு | 1 | 0 | 0 |
| துகபத்து இந்து | 1 | 4 | 0 |
| இரவுஸ்க்கூஸ்படைப்போர் | 0 | 12 | 0 |
| ஷை திக்கு | 1 | 4 | 0 |
| நசீயத்துல் மூமினீன்மாலை ரப்பு | 1 | 0 | 0 |
| பத்துகுல்மிசிரி | 1 | 8 | 0 |
| தீன்நெரி வசனம் | 2 | 0 | 0 |
| மெஞ்ஞான ரத்தின அலங்கார கீர்த்தனை | 0 | 8 | 0 |
| சத்துருசங்காரம் | 0 | 8 | 0 |
| அசன்பேகதை | 0 | 12 | 0 |
| சைபித்தூன் கிஸ்ஸா | 0 | 6 | 0 |
| ராஜநாயகம் ரப்பு | 1 | 0 | 0 |
| ஷை கிளேஸ் | 1 | 8 | 0 |
| ஜியாங்கிஷாற்புதம் | 0 | 8 | 0 |
| உம்தத்துல் இஸ்லாம் | 1 | 8 | 0 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 1 | 0 | 0 |
| சார்தர்வேஸ் கதை | 0 | 4 | 0 |
| நசீஹத்துல் இசுலாம் | 0 | 4 | 0 |
| மரண விளக்கம் | 0 | 3 | 0 |
| அபூனுவாசின் கதை | 0 | 4 | 0 |
| இராஜமணிமாலை | 0 | 12 | 0 |
| முகியித்தீன்மாலை | 0 | 6 | 0 |
| இராஜமணிமாலை முகியித்தீன்மாலை 2-ம்சேர்ந்ததுதோல் | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ | 1 | 4 | 0 |

கேட்ளாக் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**சக்கரவர்த்தி அண்டு கம்பெனி**

போஸ்டு பாக்ஸ் நெ-198,

மதருஸ்.

71/6.50